**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.83/2024**

வாதி தரப்பு 1வது சாட்சி விண்மணி என்பவரின் வாக்குமூலம் (1869ம் ஆண்டு சாட்சியசட்டம் 44வது பிரிவு 6வது விதியின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விண்மணி | சாதி | |
| கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

நாள் : 06.03.2026

வா.சா.1

**முதல் விசாரணை:** நான் இந்த வழக்கில் 2ம் வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. போலப்பநாயக்கரின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.1.** 24.10.2018ம் தேதியிட்ட போலப்ப நாயக்கரின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2.** 07.09.2023ம் தேதியிட்ட பிராது 1,2 தபசில் சொத்துக்களுக்கும் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.392, 182ன் கீழ் உள்ள 10(1) கணினி நகல் **வா.சா.ஆ.3.** 23.03.2023ம் தேதியிட்ட பிராது 3வது தபசில் சொத்துக்களுக்கான கதவு எண்கள் 1/64, 1/70, 1/72க்கும் 1ம் பிரதிவாதி தனது பெயரில் செலுத்திய தீர்வை ரசீதுகள் 3எண்ணம் அசல் **வா.சா.ஆ.4.** 21.12.2023ம் தேதியிட்ட 1ம் வாதி அளித்த கூட்டுப்பட்டா விண்ணப்பத்தின் அடிப்படையில் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு அசல் **வா.சா.ஆ.5.** 06.02.2020ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.6.** 28.02.2020ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.7.**

08.12.2020ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 4,5ம் பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் **வா.சா.ஆ.8.** 01.02.2024ம் தேதியிட்ட வாதிகள் மூவரும் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.9.** 02.02.2024ம் தேதியிட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.10.** 28.12.2018ம் தேதியிட்ட வாதிகளும், 1ம் பிரதிவாதியும் சேர்த்து கதவு எண்.25/9,25/10, 25/11 மற்றும் 28/8 நித்தியானந்தன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் நகல் **வா.சா.ஆ.11.**

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.